24th September 1958]

SRI A. GOVINDASAMY : அதிக நிலம் வாங்கக்கூடாது என்று ஒரு சட்டம் வரப்போவதாக கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த சட்டம் வருவதன் மூலம் நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டப்பட்டு அதிக நிலம் வாங்குவது தடுத்து நிறுத்தப்படுமா? அந்த சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : Future "ஸீலிங்" பற்றிதான் நான் சொன்னேன். அந்த "பில்" இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது.

SRI T. KARIA GOUNDER : சென்னை மகாணத்தில் உள்ள ஜனத்தொகை எவ்வளவு? நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டினால், தலை ஒன்றுக்கு எவ்வளவு ஏகர் வரும் என்பதை அரசாங்கம் தெரிவிக்க முன்வருமா?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI S. LAZAR : நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுவதற்கும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நேரடியான சம்பந்தங்கள் யாவை?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுபற்றி பலபேர்கள் பலவிதமாக கருதுகிறார்கள். அதில் எது சரியானது, எந்தக் கோணத்தோடு பார்ப்பது சரி என்பதையெல்லாம் ஆராயவேண்டியிருக்கிறது. அதனால் கொஞ்சம் இது விஷயத்தில் தாமதம் ஆகிறது.

SRI N. R. THIAGARAJAN : நிலத்திற்கு மட்டும் உச்சவரம்பு கட்ட வேண்டும் என்று கூக்குரல் பலமாக இருக்கிறதே. மற்ற சொத்து சுதந்திரம் இவைகளுக்கும் உச்ச வரம்பு கட்டப்படுமா? அழகு, அறிவு, ஆற்றல் இவற்றிற்கு எல்லாம் உச்சவரம்பு கட்டப்படுமா?

MR. SPEAKER : The question is out of order.

Kallaru Scheme

* 483 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any scheme by name Kallaru Scheme pending execution with the Government;

(*b*) if so, the detaills of the scheme with its estimated cost; and

(*c*) when the scheme will be taken up?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There is such a scheme but it is not pending execution.

(*b*) & (*c*) Do not arise.

SRI K. RAMACHANDRAN : சென்ற சட்டசபைக் கூட்டத் தொடரில் முன்பு இருந்த மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் இந்த திட்டம் பரிசீலிக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும் என்று ஒரு "ஸ்டேட்மெண்டு" கொடுத்திருக்கிறார்கள் பட்ஜெட் விவாதத்தின்போது. அது எப்பொழுது வரும்?

MR. SPEAKER : The hon. Member is not right in referring to what a previous Minister said.

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல ஏற்கெனவே இருந்த கனம் மந்திரி அவர்கள் இந்தத் திட்டத்தை பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பிற்பாடு, நாம் மத்திய சர்க்காரிடம், நம்முடைய சர்க்காரையும் கேரள சர்க்காரையும்

[24th September 1958

சேர்ந்த என்ஜினியர்கள் போய் பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தோம். அவர்கள் அதை ஒத்துக்கொள்ளவில்லை. மறுபடியும் பிளானிங் கமிஷனுக்கு எழுதி, செண்டிரல் வாடர் பவர் கமிஷன் மதராஸ், திருவாங்கூர் சர்க்கார்களின் * ஒத்துழைப்பின் பேரில் பரிசீலனை செய்வதாக சொல்லியிருக்கிறார்கள்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : மேற்கு பெரியாறு என்ற இடத்தில் இன்னும் அதிகமாக தண்ணீர் தேக்கிக்கொண்டு வர முடியும் என்று சொல்லப்படுகிறது. கல்லார் ஒரு தனித் திட்டம். இனி மேல் அது பரிசீலிக்கப்படும் என்றால், மேல் பெரியாறு என்ற இடத்தில் அதிக தண்ணீர் தேக்கலாம். அதை திருப்பிக்கொடுக்க கேரள சர்க்கார் முன்வந்திருக்கிறார்களா ? அதுபற்றி பேச்சு வார்த்தைகள் நடக்கின்றனவா ?

MR. SPEAKER : This supplementary does not arise out of the main question. The hon. Member may put a separate question.

SRI K. RAMACHANDRAN : இந்தத் திட்டத்தின் மூலம் பயனடையக் கூடிய பகுதிகள் யாவை என்பதைச் சொல்லமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : எந்தப் பகுதி என்று சொல்ல முடியாது. இருந்தாலும், மதுரை ஜில்லா மேற்குப் பகுதியாக இருக்கலாம்.

MR. SPEAKER : ஸ்ரீமதி சௌந்திரம் ராமச்சந்திரன் கேட்ட கேள்விக்கு கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுவதாயிருந்தால், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

New bus routes in North Arcot district

* 484 *Q.*—SRI P. S. SANTHANAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the number of applications received for the opening of new bus routes in the North Arcot district in 1957–58;

(*b*) of these, how many are new applicants and how many are bus operators with the existing bus permits; and

(*c*) of these how many are Harijans?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 229.

(*b*) (i) 115 and (ii) 114.

(*c*) 1 (new entrant).

SRI P. S. SANTHANAM : " மார்க் லிஸ்டத்தை " நீக்கிவிட்டு, ஏழை ஹரிஜனங்களுக்கு பஸ் ரூட்கள் வழங்குவதற்கு சர்க்கார் முன்வருமா ?

SRI P. U. SHANMUGAM : புதிய பஸ் பர்மிட் கேட்கக்கூடியவர்களுக்கு 15 மைல்களுக்கு உள்பட்ட ரூட்கள்தான் கொடுக்கப்படும் என்று சர்க்கார் உத்தரவு இருக்கிறது. அதை 25 மைல் என்று திருத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ?

MR. SPEAKER : How does this supplementary arise out of the main question? The main question is 'How many are new applicants, and of these how many are Harijans?' The supplementary question is out of order.